ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1877/67 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29
1877/67 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ஹக்மன உமங்கல ஓவாகிரி ரஜ மஹாவிஹாரை புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்**

இலக்கம் 1681 கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்தசாசன மற்றும் மதவிவகாரஅமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "ஹக்மன உமங்கல ஓவாகிரி ரஜ மஹா விஹாரை புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

கலாநிதி தி. மு. ஜயரத்ன,
பிரதமர், பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.

பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சு,
இலக்கம் 135, அநகாரிக்க தர்மபால மாவத்தை,
கொழும்பு 07,
2014, ஓகத்து 20.

**அட்டவணை**

ஹக்மன உமங்கல ஓவாகிரி ரஜ மஹா விஹாரை புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்

நிலஅளவையாளர் நாயகத்தின் 2012 ஓகத்து மாதம் 14 ஆம் திகதிய இலக்கம் MR/HKM/2012/295 சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தென் மாகாணத்தில், மாத்தறை நிருவாக மாவட்டத்தில், ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில், கந்தபடபத்துவ கிழக்கு சிறுபிரிவில் கங்கொடகம கிராமஉத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட 4.9704 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்ட A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள முழுக்காணி.

**A எழுத்து கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:**

வடக்கு : இ.கி.ப. இலக்கம் 507 இன் துண்டு இலக்கம் 39 மற்றும் இ.கி.ப. இலக்கம் 509 இன் துண்டு இலக்கம் 01;
கிழக்கு : இ.கி.ப. இலக்கம் 509 இன் துண்டு இலக்கம் 01 மற்றும் 02;
தெற்கு : இ.கி.ப. இலக்கம் 509 இன் துண்டு இலக்கம் 02, இ.கி.ப. இலக்கம் 507 இன் துண்டு இலக்கம் 34,40 மற்றும் 39D;
மேற்கு : இ.கி.ப. இலக்கம் 507 இன் துண்டு இலக்கம் 40, 39D,39A, மற்றும் 39.

9- 490